**Copy of Deposition**

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**DVC No**.6/2022

மனுதாரர் தரப்பு சாட்சி:1

| | |
|---|---|
| பெயர்: நதியா (PW1) | ஜாதி: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது: |

2023ம் ஆண்டு **ஜுன் மாதம் 9ம் நாள் வெள்ளிக்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் எழுத்தர் ம.உமாதேவி அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

***(1ம் எதிர் மனுதாரர் ஆஜர், 2 முதல் 4 வரையில் எதிர்மனுதாரர்கள் ஆஜரில் இல்லை, கு.வி.மு.ச. பிரிவு -317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)***

**ம.சா. – முதல் விசாரணை :-**

ம.சா.1 ஆகிய நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். என் தரப்பு முதல் விசாரணை நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். நான் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான

1) 08.12.2019 ம் தேதியிட்ட திருமண அழைப்பிதல் **அசல்** ம**.த.சா.ஆ.1 ஆ**கவும்

2) மாண்புமிகு ஈரோடு குடும்பநல நீதிமன்றத்தில் எதிர் மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் மனுதாரருக்கு சார்வு செய்யப்பட்ட நகல் ம.த.சா.ஆ**.2 ஆகவும்**

3) மாண்புமிகு ஈரோடு குடும்பநல நீதிமன்றத்தில் எதிர் மனுதாரர் தாக்கல் செய்த மனுவிற்கு மனுதாரர் தாக்கல்செய்த எதிர் உறையின் நகல் ம.த.சா.ஆ**.3 ஆகவும்**

4) மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் திருமணத்தின்போது எடுத்துக்கொண்ட புகைப்படம்

**Copy of Deposition**

ஒன்று ம.த.சா.ஆ.**4 ஆகவும்**

5) மனுதாரரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **ம.த.சா.ஆ.5 ஆகவும்**

6) மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரருக்கு பிறந்த ஸ்ரீநிவி என்ற குழந்தையின் பிறப்பு சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **ம.த.சா.ஆ.6 ஆகவும்**

7) 16.10.2022 ம் தேதியிட்ட இச்சி பாளையம் ஆ கிராமம் பட்ட எண். 725 ன் கணினி பட்டா இணைய வழி நகல் **ம.த.சா.ஆ.7 ஆகவும்**

8) 16.10.2022 ம் தேதியிட்ட இச்சி பாளையம் கிராமம் பட்ட எண். 716 ன் கணினி பட்டா இணைய வழி நகல் **ம.த.சா.ஆ.8 ஆகவும்**

9) திருமணத்தின்போது மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் உள்ளவாறு எடுத்த நிழற்படம் எண்ணிக்கை மூன்று **ம.த.சா.ஆ.9** ஆகியவற்றை மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு **செய்துகொண்டு பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.**

**ம.சா.– குறுக்கு விசாரணை (எதிர் மனுதாரர் தரப்பு ):-**

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

Sdxxx (V. Loganathan)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.